அரசாங்க நிர்வாக சுற்றறிக்கை இலக்கம் 04/2011 (ii)

எனது இல. : CS/ICTS/01/6/2006 Amd.
அரசாங்க நிர்வாக மற்றும்
உள்நாட்டலுவல்கள் அமைச்சு
சுதந்திர சதுக்கம்
கொழும்பு 07
2014.08.28

சகல அமைச்சுக்களினதும் செயலாளர்கள்
திணைக்களத் தலைவர்கள்
மாவட்டச் செயலாளர்களுக்கு

**<u>இலங்கை தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்ப சேவைக்கு 2009.07.01 ஆம் திகதியிலுள்ளவாறு உள்ளீர்க்கப்பட்ட அலுவலர்களை அதே திகதியிலிருந்து உரிய வகுப்பில் மீள் உள்ளீர்ப்புச் செய்தல்</u>**

2009 ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் 09 ஆம் திகதிய 1631/20 ஆம் இலக்க இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட 2009 ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் 08 ஆம் திகதிய இலங்கை தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்ப சேவைப் பிரமாணக் குறிப்பு மற்றும் குறித்த சேவைக்குள் உள்ளீர்ப்பு ஆகியன தொடர்பிலான 2011.02.15 ஆம் திகதிய 04/2011 ஆம் இலக்க மற்றும் 2012.08.16 ஆம் திகதிய 04/2011 (i) ஆம் இலக்க அரசாங்க நிர்வாக சுற்றறிக்கைகளின் மீது கவனம் இத்தால் ஈர்க்கப்படுகின்றது.

**02.** தர முறைமைக்குள் மீள் உள்ளீர்ப்பு

(அ) 2011.02.15 ஆம் திகதிய 04/2011 ஆம் இலக்க மற்றும் 2012.08.16 ஆம் திகதிய 04/2011 (i) ஆம் இலக்க அரசாங்க நிர்வாக சுற்றறிக்கைகள் மற்றும் 2011.11.16 ஆம் திகதிய PSC/ET/3/1/10- தொகுதி I ஆம் இலக்க அரசாங்க சேவைகள் ஆணைக்குழு செயலாளரின் கடிதத்தின் மூலம் அறிவிக்கப்பட்ட தீர்மானம் ஆகியவற்றுக்கமைய 2009.07.01 ஆம் திகதியிலிருந்து அமுலுக்கு வரும் வண்ணம் சேவைக்குள் உள்ளீர்க்கப்பட்டுள்ள அலுவலர்களானவர்கள் அலுவலர்களின் முன்னைய சேவைக் காலம், தகைமைகள் மற்றும் உள்ளீர்ப்பு வேளையில் ஈட்டிக்கொண்ட சம்பளம் ஆகியவற்றைக் கருத்திற்கொண்டு 2009.07.01 ஆம் திகதியிலிருந்து அமுலுக்கு வரும் வண்ணம் கீழே 2.1, 2.2, 2.3, 2.4 மற்றும் 2.5 ஆகியவற்றில் குறிப்பிடப்பட்டவாறு மீள் உள்ளீர்க்கப்படுகின்றனர்.

(ஆ) மீள் உள்ளீர்ப்புச் செய்யப்படும் அலுவலர்களின் சம்பளமானது 2009.07.01 ஆம் திகதியிலிருந்து அமுலிலிருக்குமாறு தாபன விதிக்கோவையின் அத்தியாயம் VII இன் பிரிவு 04 இலுள்ள ஏற்பாடுகளுக்கமைய மாற்றப்படுதல் வேண்டும் என்பதுடன்

தாபன விதிக்கோவையின் அத்தியாயம் VII இன் உட்பிரிவு 4.4 இலுள்ள ஏற்பாடுகள் ஏற்புடையனவாகாது. எனினும், சம்பள ஏற்றத்தின் முன்னைய திகதியானது மாற்றப்படுதலாகாது.

## 2.1 வகுப்பு 3 இன் தரம் II இற்குள் மீள் உள்ளீர்ப்புச் செய்தல்

பின்வரும் தகைமைகளை பூர்த்திசெய்துள்ள அலுவலர்கள் 2009.07.01 ஆம் திகதியிலிருந்து அமுலுக்கு வரும் வண்ணம் வகுப்பு 3 இன் தரம் II இற்குள் மீள் உள்ளீர்ப்புச் செய்யப்படல் வேண்டும்.

(அ) நியமனத்தில் உறுதிப்படுத்தப்பட்டிருத்தல்
(ஆ) 2009.07.01 ஆம் திகதியிலுள்ளவாறு சேவையின் வகுப்பு 3 இன் தரம் III இற்குள் உள்ளீர்க்கப்பட்டிருத்தல்
(இ) முன்னைய பதவியின் முதலாவது வினைத்திறன்காண் தடைப் பரீட்சையினைச் சித்தியெய்தியிருத்தல்
(ஈ) 2009.07.01 ஆம் திகதிக்கு உடன் முன்வரும் 10 வருடத்தில் அனுமதிக்கப்பட்ட செயற்றிறன் மதிப்பீட்டு நடைமுறைக்கு அமைய திருப்திகரமான அல்லது அதனை விட மேலான செயற்றிறன் மட்டம் ஒன்றை நிரூபித்திருத்தல்
(உ) 2009.07.01 ஆம் திகதிக்கு உடன் முன்வரும் 05 வருடத்தில் திருப்திகரமான சேவைக் காலம் ஒன்றைப் பூர்த்திசெய்திருத்தல்
(ஊ) 2009.07.01 ஆம் திகதிக்கு உடன் முன்வரும் குறைந்தது 10 வருட முனைப்பான சேவைக் காலம் ஒன்றைப் பூர்த்திசெய்திருத்தல்
(எ) 2009.07.01 ஆம் திகதியிலுள்ளவாறு ரூபா. 16,045 சம்பளம் ஒன்றை அல்லது சம்பள அளவுத்திட்டம் எம்என் 1 2006 ஏ இன் அல்லது ஒத்த சம்பள திட்டம் ஒன்றிலுள்ள உயர் சம்பளப் படிமுறை ஒன்றில் சம்பளம் ஒன்றை ஈட்டியிருத்தல்

## 2.2 வகுப்பு 3 இன் தரம் I இற்குள் மீள் உள்ளீர்ப்புச் செய்தல்

பின்வரும் தகைமைகளை பூர்த்திசெய்துள்ள அலுவலர்கள் 2009.07.01 ஆம் திகதியிலிருந்து அமுலுக்கு வரும் வண்ணம் வகுப்பு 3 இன் தரம் I இற்குள் மீள் உள்ளீர்ப்புச் செய்யப்படல் வேண்டும்.

(அ) நியமனத்தில் உறுதிப்படுத்தப்பட்டிருத்தல்
(ஆ) 2009.07.01 ஆம் திகதியிலுள்ளவாறு சேவையின் வகுப்பு 3 இன் தரம் III இற்குள் உள்ளீர்க்கப்பட்டிருத்தல்
(இ) முன்னைய பதவிக்குரிய ஏதேனும் முதலாவது மற்றும் இரண்டாவது வினைத்திறன்காண் தடைப் பரீட்சைகள் இருப்பின் உரியவற்றைச் சித்தியெய்தியிருத்தல் அல்லது ஆட்சேர்ப்பு நடைமுறையில் ஒன்று மட்டுமே

இருப்பின் அவ் வினைத்திறன்காண் தடைப் பரீட்சையினைச் சித்தியெய்தியிருத்தல்

(ஈ) தரப்படுத்தலுக்காக கருத்திற்கொள்ளப்பட்ட சேவைக் காலப்பகுதியில் அனுமதிக்கப்பட்ட செயற்றிறன் மதிப்பீட்டு நடைமுறைக்கு அமைய திருப்திகரமான அல்லது அதனை விட மேலான செயற்றிறன் மட்டம் ஒன்றை நிரூபித்திருத்தல்

(உ) 2009.07.01 திகதிக்கு உடன் முன்வரும் 05 வருடத்தில் திருப்திகரமான சேவைக் காலம் ஒன்றைப் பூர்த்திசெய்திருத்தல்

(ஊ) 2009.07.01 திகதிக்கு முன்தொடர்ந்த ஆண்டுகளில் குறைந்தது 20 வருட முனைப்பான சேவைக் காலம் ஒன்றைப் பூர்த்திசெய்திருத்தல்

(எ) 2009.07.01 ஆம் திகதியிலுள்ளவாறு ரூபா. 17,985 சம்பளம் ஒன்றை அல்லது சம்பள அளவுத்திட்டம் MN 1-2006 A அல்லது ஒத்த சம்பள திட்டம் ஒன்றிலுள்ள உயர் சம்பளப் படிமுறை ஒன்றிலுள்ள சம்பளம் ஒன்றை ஈட்டியிருத்தல்

## 2.3 வகுப்பு 2 இன் தரம் I இற்குள் மீள் உள்ளீர்ப்புச் செய்தல்

பின்வரும் தகைமைகளை பூர்த்திசெய்துள்ள அலுவலர்கள் 2009.07.01 ஆம் திகதியிலிருந்து அமுலுக்கு வரும் வண்ணம் வகுப்பு 2 இன் தரம் I இற்குள் மீள் உள்ளீர்ப்புச் செய்யப்படல் வேண்டும்.

(அ) நியமனத்தில் உறுதிப்படுத்தப்பட்டிருத்தல்

(ஆ) 2009.07.01 ஆம் திகதியிலுள்ளவாறு சேவையின் வகுப்பு 2 இன் தரம் II இற்குள் உள்ளீர்க்கப்பட்டிருத்தல்

(இ) சேவையின் வகுப்பு 2 இற்குள் உள்ளீர்ப்புச் செய்வதற்குரிய கல்வித் தகைமைகளைப் பூர்த்திசெய்திருத்தல்

(ஈ) முன்னைய பதவியின் முதலாவது வினைத்திறன்காண் தடைப் பரீட்சையினைச் சித்தியெய்தியிருத்தல் / அதிலிருந்து விலக்களிக்கப்பட்டிருத்தல்

(உ) 2009.07.01 ஆம் திகதிக்கு உடன் முன்வரும் குறைந்தது 10 வருட முனைப்பான சேவைக் காலம் ஒன்றைப் பூர்த்திசெய்திருத்தல்

(ஊ)

(i) 2009.07.01 ஆம் திகதியிலுள்ளவாறு ரூபா. 21,380 சம்பளம் ஒன்றை அல்லது சம்பள அளவுத்திட்டம் எம்என் -5- 2006 ஏ இற்கு மேலான சம்பளம் ஒன்றை ஈட்டியிருத்தல்

அல்லது

(ii) 2009.07.01 ஆம் திகதியிலுள்ளவாறு ரூபா. 21,245 சம்பளம் ஒன்றை அல்லது சம்பள அளவுத்திட்டம் எம்என் -6- 2006 ஏ அல்லது முன்னைய ஒத்த சம்பள

திட்டம் ஒன்றிலுள்ள உயர் சம்பளப் படிமுறை ஒன்றிலுள்ள சம்பளம் ஒன்றை ஈட்டியிருத்தல்

## 2.4 வகுப்பு 1 இன் தரம் II இற்குள் மீள் உள்ளீர்ப்புச் செய்தல்

பின்வரும் தகைமைகளை பூர்த்திசெய்துள்ள அலுவலர்கள் 2009.07.01 ஆம் திகதியிலிருந்து அமுலுக்கு வரும் வண்ணம் வகுப்பு 1 இன் தரம் II இற்குள் மீள் உள்ளீர்ப்புச் செய்யப்படல் வேண்டும்.

(அ) நியமனத்தில் உறுதிப்படுத்தப்பட்டிருத்தல்

(ஆ) 2009.07.01 ஆம் திகதியிலுள்ளவாறு சேவையின் வகுப்பு 1 இன் தரம் III இற்குள் உள்ளீர்க்கப்பட்டிருத்தல்

(இ) 2009.12.09 ஆம் திகதிய 1631/20 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட சேவைப் பிரமாணக் குறிப்பின் 8.6.1. (உ) இல் குறிப்பிடப்பட்ட தகைமைகளைப் பூர்த்திசெய்திருத்தல் அல்லது 4/2011 ஆம் இலக்க அரசாங்க நிர்வாகச் சுற்றறிக்கையின் 5.3 (ii) இல் குறிப்பிடப்பட்டவாறு தகவல் தொழில்நுட்பத்தில் பட்டப்பின் டிப்ளோமா ஒன்றினைப் பூர்த்திசெய்திருத்தல்

(ஈ) முன்னைய பதவியின் முதலாவது வினைத்திறன்காண் தடைப் பரீட்சையினைச் சித்தியெய்தியிருத்தல் / அதிலிருந்து விலக்களிக்கப்பட்டிருத்தல்

(உ)

(i) 2009.07.01 ஆம் திகதியிலுள்ளவாறு எஸ்எல்-1-2006 இல் அல்லது முன்னைய ஒத்த சம்பள திட்டம் ஒன்றில் குறைந்தது 10 சம்பள ஏற்றங்களைப் பெற்றிருத்தல் அத்துடன் 10 வருட முனைப்பானதும் திருப்திகரமானதுமான சேவைக் காலத்தினைப் பூர்த்திசெய்திருத்தல்

அல்லது

(ii) 2009.07.01 ஆம் திகதியிலுள்ளவாறு ரூபா. 30,175 சம்பளம் ஒன்றை அல்லது சம்பள அளவுத்திட்டம் எஸ்எல்-1-2006 அல்லது முன்னைய ஒத்த சம்பள திட்டம் ஒன்றிலுள்ள உயர் சம்பளப் படிமுறை ஒன்றிலுள்ள சம்பளம் ஒன்றை உழைக்கும் தகவல் தொழில்நுட்பத் துறையில் உதவிப் பணிப்பாளர் மட்டத்திலுள்ள பதவி ஒன்றை வகிக்கும் அலுவலர் ஒருவராக இருத்தல்,

## 2.5 வகுப்பு 1 இன் தரம் I இற்குள் மீள் உள்ளீர்ப்புச் செய்தல்

பின்வரும் தகைமைகளை பூர்த்திசெய்துள்ள அலுவலர்கள் 2009.07.01 ஆம் திகதியிலிருந்து அமுலுக்கு வரும் வண்ணம் வகுப்பு 1 இன் தரம் I இற்குள் மீள் உள்ளீர்ப்புச் செய்யப்படல் வேண்டும்.

(அ) நியமனத்தில் உறுதிப்படுத்தப்பட்டிருத்தல்

(ஆ) 2009.07.01 ஆம் திகதியிலுள்ளவாறு சேவையின் வகுப்பு 1 இன் தரம் III இற்குள் உள்ளீர்க்கப்பட்டிருத்தல்

(இ) 2009.12.09 ஆம் திகதிய 1631/20 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட சேவைப் பிரமாணக் குறிப்பின் 8.6.1. (உ) இல் குறிப்பிடப்பட்ட தகைமைகளைப் பூர்த்திசெய்திருத்தல் அல்லது 4/2011 ஆம் இலக்க அரசாங்க நிர்வாகச் சுற்றறிக்கையின் 5.3 (ii) இல் குறிப்பிடப்பட்டவாறு தகவல் தொழில்நுட்பத்தில் பட்டப்பின் டிப்ளோமா ஒன்றினைப் பூர்த்திசெய்திருத்தல்

(ஈ) முன்னைய பதவியின் முதலாவது வினைத்திறன்காண் தடைப் பரீட்சையினைச் சித்தியெய்தியிருத்தல் / அதிலிருந்து விலக்களிக்கப்பட்டிருத்தல்

(உ)

(i) 2009.07.01 ஆம் திகதியிலுள்ளவாறு சம்பள அளவுத்திட்டம் எஸ்எல்-1-2006 இல் சம்பளம் ஒன்றை உழைக்கும் தகவல் தொழில்நுட்பத் துறையில் பணிப்பாளர் மட்டத்திலுள்ள பதவி ஒன்றை வகிக்கும் அலுவலர் ஒருவராக இருத்தல்

அல்லது

(ii) 2009.07.01 ஆம் திகதியிலுள்ளவாறு சம்பள அளவுத்திட்டம் எஸ்எல்-01-2006 இலுள்ள தரம் II இற்குரிய சம்பளத்தினை உழைக்கும் தரம் II இல் ஏழு (07) வருட சேவைக் காலம் ஒன்றைப் பூர்த்திசெய்துள்ள தகவல் தொழில்நுட்பத் துறையில் பிரதிப் பணிப்பாளர் மட்டத்திலுள்ள பதவி ஒன்றை வகிக்கும் அலுவலர் ஒருவராக இருத்தல்

**03.** மேலே 2.1, 2.2, 2.3, 2.4 மற்றும் 2.5 இல் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளின் கீழ் மீள் உள்ளீர்ப்புச் செய்யப்படாத அலுவலர்களானவர்கள் அவர்களின் முன்னைய சேவைக் காலப்பகுதியினைக் கருத்திற்கொண்டு சேவைப் பிரமாணக் குறிப்பில் குறிப்பிடப்பட்ட தேவைப்பாடுகளை அவர்கள் பூர்த்திசெய்யும் திகதியில் அடுத்த தரத்திற்கு பதவியுயர்த்தப்படல் வேண்டும்.

**04.** மீள் உள்ளீர்ப்புச் செய்யப்படும் அலுவலர்கள் அவர்களின் அடுத்த பதவியுயர்விற்காக சேவைப் பிரமாணக் குறிப்பில் குறிப்பிடப்பட்ட தகைமைகளைப் பூர்த்திசெய்தல் வேண்டும். எனினும், மீள் உள்ளீர்ப்புக்காக கருத்திற்கொள்ளப்பட்ட சேவைக் காலப் பகுதிக்கு மேலதிகமாக உள்ள முன்னைய சேவைக் காலப்பகுதியானது அடுத்த பதவியுயர்வில் மட்டுமே கருத்திற்கொள்ளப்படல் வேண்டும்.

**ஒப்பம் / பி.பீ. அபேகோன்**

செயலாளர்

அரசாங்க நிர்வாக மற்றும் உள்நாட்டலுவல்கள் அமைச்சு